Shalom

தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 8 இதழ் : 10 ஆகஸ்ட் – 2012



**....நீ எப்சிபா என்றும்,**
**உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்;**
**கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்;**
**உன் தேசம் வாழ்க்கைப்படும்.** ஏசாயா 62 : 4

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## உங்கள் சகோதரனிடமிருந்து....

### கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே...

### ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!



தேவனுடைய பெரிதான கிருபையாலும், உங்கள் யாவரின் ஊக்கமான ஜெபங்களினாலும், தியாகமான காணிக்கைகளினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த ஜுலை மாதம் 1ம் தேதி ஷாலோம் ஊழியப்பாதையில் 22 ஆண்டுகளை நிறைவு செய்து 23வது ஆண்டில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை பாராட்டினார்.

ஜுலை மாதம் நடைபெற்ற ஊழியர் கூடுகைகள், பயிற்சி முகாம்கள், ஆதிவாசி மாணவர் கூடுகைகள் அனைத்தையும் தேவன் ஆசீர்வதித்தார். குறிப்பாக CBN ஸ்தாபனத்துடன் இணைந்து 25 கிராமங்களுக்கு ஆழ்குழாய் குடிநீர் வசதி செய்து கொடுக்க தேவன் கிருபை செய்தார். தேவன் இம் மாதம் நல்ல பருவ மழையை கட்டளையிட்டுள்ளார். நல்ல விளைச்சலை தேவன் தரும்படியாகவும், இன்னும் தேவையான மழை கிடைக்கப் பெறவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

தேவனுக்குச் சித்தமானால் வரும் 06.08.2012 திங்கட்கிழமை அன்று எங்களது அன்பு மூத்த மகன் D. கிளாட்சன் டைட்டஸ் – மெர்லின் திருமணம் தூத்துக்குடியில் நடைபெறவுள்ளது. அனைவருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பியுள்ளோம். ஒருவேளை அழைப்பிதழ் உங்கள் கரங்களில் கிடைக்காவிட்டால் இந்த இதழின் பத்திரிகையை அன்புடன் ஏற்றுக்கொண்டு, கட்டாயமாக குடும்பமாக வருகை தந்து மணமக்களை ஜெபித்து ஆசீர்வதிக்க அன்புடன் வேண்டுகிறோம். மேலும் ஆகஸ்ட் 16,17,18 ஆகிய மூன்று தினங்களும் குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தானில் நடைபெறவுள்ள திருமண வரவேற்பு வைபவங்களுக்காகவும் ஜெபியுங்கள். திருமண ஆயத்தங்களுக்காகவும், அனைத்து தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள். திருமணத்திற்குப் பின் அன்பு மகன் குடும்பமாக பணித்தளத்திற்கு வந்து கல்வி முன்னேற்றப் பணி திட்டங்களில் பொறுப்பு ஏற்று ஊழியங்களை நிறைவேற்ற உள்ளார்கள், ஜெபியுங்கள்.

எங்களது இரண்டாவது மகன் ஷாலோம் மற்றும் ரஷ்யாவில் மருத்துவம் பயின்றுவரும் ஷெக்கினா ஆகியோருக்காக ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபித்து வருகிறோம்.

**அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி,**
**உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக. சங். 20:4**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன் குடும்பம்*

(Rt. Rev. Dr. V. Devadass)

குறிப்பு : பேராயர் அவர்களுடன் தொடர்பு கொள்ள 09377445468

ஆசீர்வாதமான இந்தியா....

# உன் தேசம் வாழ்க்கைப்படும்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**"நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப்பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும்.** ஏசாயா 62:4

***கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!***

தேவன் இந்த பாரத தேசத்தில் நம்மை பிறக்க வைத்து, நம் தேசத்திற்கு ஆசீர்வாதமாக வைத்தபடியால் தேவனைத் துதிப்போம். கர்த்தர் நம் தேசத்தை அதிகம் நேசிக்கிறார். பழைய ஏற்பாட்டில் எஸ்தர் முதல் அதிகாரத்தில் இந்து தேசம் என்று நம் தேசத்தைக் குறித்து எழுதி வைத்துள்ளார். முதலாம் நூற்றாண்டில் தம் அப்போஸ்தலனாகிய தோமாவை நம் தேசத்திற்காக அனுப்பி வைத்தார்.

தேவன் நம் தேசத்திற்கு தந்த சுதந்திரத்திற்காக தேவனைத் துதிப்போம். தேவன் நம் தேசத்தை அசீர்வதிக்க அனுப்பித் தந்த மிஷனெரிகளுக்காக தேவனைத் துதிப்போம். அது மட்டுமல்லால், தேவன் நம் தலைமுறையில் நம் தேசத்தை ஆசீர்வதிக்கவும், **"ஆசீர்வாதமான பாரத தேசத்தை நாம் காணவும் ஜெபிப்போம்"**, உழைப்போம், அதற்காகத்தான் தேவன் தந்த வாக்குத்தத்தம் **"உன் தேசம் வாழ்க்கைப்படும்"** என்பதே. தேசம் வாழ்க்கைப்படுவதற்கு மிக முக்கியமான காரணம் **"கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்".** என்று ஏசாயா 62:4ல் வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 37–50 வரை உள்ள அதிகாரங்களில் எகிப்து தேசத்தை தேவன் ஆசீர்வதித்து தம் ஜனங்களைப் பலுகிப் பெருகப்பண்ணினார் என வாசிக்கிறோம். தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக தேவன் யோசேப்பை தெரிந்து கொண்டு அவன் மூலமாக பரிபூரண நன்மைகளைக் கட்டளையிட்டார். அதனை நாம் சற்று தியானிப்போம்.

### முதலாவதாக

**"காலமே பார்வோனுடைய மனம் கலக்கங்கொண்டிருந்தது; அப்பொழுது அவன் எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும் சகல சாஸ்திரிகளையும் அழைப்பித்து, அவர்களுக்குத் தன் சொப்பனத்தைச் சொன்னான்; ஒருவராலும் அதின் அர்த்தத்தைப் பார்வோனுக்குச் சொல்லக்கூடாமற்போயிற்று" – ஆதி. 41:8**

எகிப்து தேசத்தை ஆளுகை செய்யும் பார்வோன் ராஜாவிற்கு தேவன் தேசத்தின் வருங்காலத்தைக் குறித்து சொப்பனத்தைத் தந்தார். ஆனால் காலமே பார்வோன் மனம் கலக்கமடைந்தது, அதன் அர்த்தத்தை அறிய முடியாமல் இது என்னவோ என்று கலங்குகிறான்.

மந்திரவாதிகள், சாஸ்திரிகள் மற்றும் ஆலோசனைக்காரர்கள் அனைவரிடமும் தான் கண்ட சொப்பனத்தைக் கூறுகிறான், ஆனால் யாராலும் சொப்பனத்தின் அர்த்தத்தை கூறமுடியவில்லை. பார்வோன் என்று சொல்லும்போது உலகத்தைக் குறிக்கிறது. உலகத்தில் உள்ள தேசங்களைக் குறிக்கிறது. தேசங்கள் கலக்கமடையும்போது மந்திரவாதிகளையும், சாஸ்திரிகளையும் உலகம் தேடுகிறது. தேசத்தில் என்ன நடக்குமோ என்ற கலக்கம். எப்படி இராஜ்ஜியத்தை நடத்திச் செல்வது என்ற குழப்பம். உலகமும் உலகத்தில் உள்ள தேசங்களும் பல வழிகளைத் தேடிச் செல்கின்றன. இரண்டாவதாக **"தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தது"** ஆதி. 43:1 தேசத்தில் 7வருடம் பஞ்ச காலம் முந்தின 7 வருட ஆசீர்வாதங்களை விழுங்கிவிடத் தக்கதான கொடிய பஞ்சம். கொடிய பஞ்சத்திலிருந்து மீட்பு எப்படி கிடைக்கும்? தேவனுடைய தீர்மானம் என்ன? தேவ திட்டம் என்ன? தேவனுடைய ஆலோசனை என்ன? அறியாமல் தேசம் (பார்வோன்) கலங்குகிறது.

எத்தனையோ வழிகளில் பிரயாசப்பட்டும் ஒன்றும் முடியாமற்போய்விட்டது. இராஜாவின் இருதயமோ கலக்கமடைந்தது. தேசத்தில் என்ன நடக்கும்? எவ்விதமான பிரச்சினை எழும்பப் போகிறது? அதை எப்படி சமாளித்து தேசத்தையும் ஜனங்களையும் நடத்திச் செல்வது என அறியாமல் திகைத்து நின்றான் பார்வோன் ராஜா. இன்றைக்கும் ஒவ்வொரு தேசத்திற்கும் அதை ஆளுகை செய்பவர்களுக்கும் முன்பாக திரளான பிரச்சினைகள். தீவிரவாத பிரச்சனைகள், உள் நாட்டுக் குழப்பங்கள், பொருளாதார பிரச்சனைகள், ஜாதிமதப் பிரச்சினைகள், என பல பிரச்சனைகள் நிறைந்த சூழ்நிலையில்தான் ஆட்சி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. ஆனாலும் பிரியமானவர்களே தேசத்தின் பிரச்சினையான சூழ்நிலைகளை மாற்றி ஆசீர்வாதமான தேசமாக மாற்ற வல்ல தேவன் நம் மத்தியில் இருக்கிறார். நம் தேவன் தேசத்தை ஆசீர்வதிக்கும் தேவன்.

**இரண்டாவதாக**

நம் தேசத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கும், தேவைகளுக்கும் மற்றும் தேவைப்படும் ஆசீர்வாதத்திற்கும் பதில் என்ன? அதுதான் யோசேப்பு. தேவன் எகிப்து தேசத்தை ஆசீர்வதிக்க யோசேப்பைத் தெரிந்து கொண்டார். வேதத்தில் யோசேப்பிற்கும் இயேசுவுக்கும் அதிகமான ஒற்றுமைகள் உண்டு. யோசேப்பின் வாழ்வில் இயேசுவின் நிழலைக் காணலாம்.

யோசேப்பு கனி தரும் திராட்சைச் செடி என்று காண்கிறோம் இயேசுவும் கனிதரும் திராட்சைச் செடியாக இருக்கிறார். யோசேப்பு தன் தகப்பனுக்கு மிகவும் பிரியமானவன். இயேசுவும் பிதாவிற்கு மிகவும் பிரியமானவர். யோசேப்பின் அங்கி பலவருண அங்கி விசேஷமானது. அது இரத்தத்தில் தோய்க்கப்பட்டு தகப்பனிடத்தில் காட்டப்பட்டது. இயேசுவின் அங்கியும் இரத்தத்தில் தோய்க்கப்பட்டது. யோசேப்பு குழியில் இறக்கப்பட்டான். இயேசுவும் அடக்கம் செய்யப்பட்டார். யோசேப்பு 20 வெள்ளி காசுக்கு விற்கப்பட்டான். இயேசுவும் 30 வெள்ளிக்காசுகளுக்கு காட்டிக் கொடுக்கப்பட்டார். யோசேப்பு எங்கெல்லாம் இருந்தாரோ அங்கெல்லாம் தேவன் அவரோடுகூட இருந்தார். இயேசு கிறிஸ்துவுடனும் பிதாவாகிய தேவன் கூடவே இருந்தார். தனியாக அவரை விடவில்லை. யோசேப்பு தன் வாழ்வில் பரிசுத்தத்தைக்

காத்துக்கொண்டார். இயேசுவும் தன் வாழ்வில் பரிசுத்தராக இருந்தார். யோசேப்பு சிறையில் செய்யாத தவறுக்கு தண்டிக்கப்பட்டும் பொறுமையுடன் சகித்தார். இயேசுவும் குற்றமில்லாத அவர், பாவமறியாத அவர் நமக்காக தண்டிக்கப்பட்டார். பொறுமையுடன் சிலுவையின் பாடுகளை சகித்தார். யோசேப்பு தேவ ஆவியால் நிரப்பப்பட்டான். இயேசுவும் பரிசுத்த ஆவியியால் அளவில்லாமல் நிரப்பப்பட்டார். யோசேப்பு மன்னிக்கும் சுபாவத்தைப் பெற்றிருந்தான். தனக்கு விரோதமாக இருந்த சகோதரர்கள் தன்னிடத்தில் வந்தபோது மன்னித்து, மறந்து அவர்களை நேசித்தான். இயேசுவும் பாவிகளாகிய நம்மை மன்னிக்கிறவர். மேலும் பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று ஜெபித்தார். யோசேப்பு தன் முழுக் குடும்பத்தாருக்கு மட்டுமல்ல தேசத்திற்கும் ஆசீர்வாதமாக இருந்தார். இயேசுவும் இந்த உலகமனைத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்கிறார்.

யோசேப்பிற்கு பார்வோன் முழு அதிகாரமும் தந்தான். சகல ஜனங்களும் யோசேப்பிற்குக் கீழ்ப்படிந்தார்கள். பிதாவாகிய தேவனும் இயேசுவுக்கு முழு அதிகாரம் தந்துள்ளார். முழங்கால் யாவும் முடங்கும், நாவு யாவும் அறிக்கை செய்யும் இயேசுவே ஆண்டவர் என்று. இப்படிப்பட்ட யோசேப்பைப் போல் இயேசுவும் நம் தேசத்தில் உயர்த்தப்படும் போது தேசம் ஆசீர்வாதமாக அமையும். அவர்தான் தேசங்களை ஆளுகை செய்து, ஞானத்தைத் தந்து ஜனங்களை ஆசீர்வதிக்கிறவர். அவருக்கே மகிமை உண்டாவதாக!

**மூன்றாவதாக**

**“பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து விட்டான்”.** ஆதி. 40:23 யோசேப்பு சிறையில் இருக்கும்போது தன் வாழ்க்கையில் செய்த பாவத்தின் நிமித்தம் தண்டிக்கப்பட்டு சிறையில் இருந்த பானபாத்திரக்காரன் தேவ தயவினாலும், யோசேப்பின் கிருபையுள்ள வார்த்தைகளாலும் தேற்றப்பட்டு அதன்படியே அவன் பார்வோன் அரண்மனையில் உயர்த்தப்பட்டான். யோசேப்பு அவனிடம் “நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும்.” “நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை” என்று சொன்னான் ஆதி. 40:14,15 ஆனால் வேதம் சொல்லுகிறது பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் மறந்து விட்டான்.

இயேசுவும் நம்மை வாழ்வடையச் செய்யும்போது அவரை நாம் நினைக்க வேண்டும். பாவமில்லாத அவர், நமக்காக பாவமானார்; சாபமானார்; சிலுவையில் ஜீவன் தந்தார். யோசேப்பு சிறைச்சாலையில் இருந்த போது, அவனை தேசமும் பார்வோனும் அறியாமலிருந்தது போல இயேசுவை யார்? என்று ஒரு முறை கூட அறியாத ஜனங்கள் தேசத்தில் உண்டு. அவர்களுக்கு இயேசுவை அறிவிக்க நீ தேவை. இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகளாகிய நாம் அவரை அறிவிக்க வேண்டும்.

அவர் அறிவிக்கப்படாமல் இருந்தால் தேசம் கலக்கமாயிருக்கும், ஆளுகிறவர்களும் கலக்கமாயிருப்பார்கள். ஆலோசனையின்றி தவிப்பார்கள். இயேசுவின் நாமம் அறிவிக்கப்பட்டு,

தேசத்தில் உயர்த்தப்படும்போது முழு தேசமும் தேவனுடைய ஞானத்தினால் ஆளுகை செய்யப்பட்டு தேவ ஆசீர்வாதத்தினால் நிரம்பும்.

பானபாத்திரக்காரன் தன் தவறை உணர்ந்தான். (ஆதி. 41:10) பார்வோனிடத்தில் வந்து நம் தேசத்திற்கு ஆசீர்வாதம், விடுதலை மீட்புக்கு ஒரு மனிதர் உண்டு அவர் யோசேப்பு. அறியப்படாமல் சிறையில் இருக்கிறார் என்று பார்வோனுக்கு அறிவித்தபோது, பார்வோன் யோசேப்பை வரவழைத்து அந்த சொப்பனத்தைக் கூற, யோசேப்பு அதற்கான அர்த்தத்தைக் கூறினான். இவ்வாறாக அந்த தேசம் ஆசீர்வதிக்கப்பட்டது.

நாம் சபையாக, தனிப்பட்ட விசுவாசியாக இயேசுவை அறிவிப்போம். தேசத்திற்கு ஆசீர்வாதமாக இருப்போம். நாமும் இயேசுவை அறிவித்து, அவரை உயர்த்த மறந்த நம் குற்றத்தை நினைவில் கொண்டவர்களாய் இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிப்போம். தேசம் தேவனை அறியும். நம் தேசம் வாழ்க்கைப்படும். ஆசீர்வாதமான இந்தியாவை நாம் காண்போம். அல்லேலூயா! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## பணித்தளத்தின் அவசர தேவைக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. | வீடியோ கேமரா (Normal) - 1 | மதிப்பு ரூ. 30,000 |
| 2. | வீடியோ கேமரா (Professional) - 1 | மதிப்பு ரூ. 1,75,000 |
| 3. | கேமரா 3 (3 மாநிலங்களுக்கும்) | மதிப்பு ரூ. 20,000 வீதம் (மொத்தம் ரூ. 60,000) |
| 4. | வீடியோ எடிட்டிங் செய்ய கம்யூட்டர் – 1 | மதிப்பு ரூ. 1,25,000 |
| 5. | ஜெனரேட்டர் – 1 | மதிப்பு ரூ. 1,00,000 |

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

` ôúXôm ETYôN ù_Tm &

Yôd Ï jRjR BºoYôRd áÓûL

நாள் : **02.08.2012 (வியாழக்கிழமை)**

நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை**

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்**, பாளையங்கோட்டை

# இந்தியாவில் சுவிஷேசம்

"கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும்,
மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்" (ஏசாயா 40:5)

**தேவன் இந்தியாவை ஆசீர்வதிக்கவும், இந்தியாவில் சுவிஷேசம் விரைவாகப் பரவவும் கீழ்க்கண்ட குறிப்புகளுக்காக மறவாமல் ஜெபியிங்கள்!**

- ✞ உலகளவில் மிஷனெரி ஸ்தாபனங்களில் 1/3 இந்தியாவில் உள்ளன.
- ✞ உலகளவில் நற்செய்தி அறிவிக்கப்படாத மக்களில் 25% இந்தியாவில் உள்ளனர்.
- ✞ இந்தியாவில் இயேசுவை அறியாத 3.5 இலட்சம் கிராமங்கள் உள்ளன. இங்கும் 40 கோடி பேருக்கு இயேசு அறிவிக்கப்படவில்லை.
- ✞ இந்தியாவில் முஸ்லிம்களில் 98% பேருக்கு சுவிஷேசம் செல்லவில்லை.
- ✞ இந்தியாவில் 30,000க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 204 இன மக்கள் உள்ளனர்.
- ✞ 2,600 இன மக்களிடையே ஒரு சபை கூட இல்லை.
- ✞ இந்தியாவில் சுமார் 3,000–மிஷனெரி ஸ்தாபனங்கள் 20,000– மிஷனெரிகளுடன் 2,000 பணித்தளங்களில் ஊழியஞ்செய்து வருகின்றன.
- ✞ இந்தியாவில் சுவிஷேசம் அறிவிக்கும் வானொலி நிறுவனம் FEBA, TWR
- ✞ இந்தியாவில் 13–கோடி பேருக்கு ரேடியோ, தொலைக்காட்சி மூலம் அறிவிக்கப்படும் சுவிசேஷ ஒளிபரப்பு சென்றடைவதில்லை.
- ✞ இந்தியாவில் 21–மொழிகளில் இயேசுவின் திரைப்படம் வந்துள்ளது.
- ✞ இந்தியாவில் ஆண்டிற்கு 39–மொழிகளில் 50–இலட்சம் துண்டுப் பிரதிகளில் தேவனுடைய செய்திகள் அச்சிடப்படுகிறது.
- ✞ இந்தியாவில் 1–இலட்சத்திற்கும் மேல் முழுநேர ஊழியர்கள் உள்ளனர்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்கள் 70% தென் மாநிலங்கள், 25% வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் 5% வடக்கு, மேற்கு மாநிலங்களிலும் உள்ளனர்.
- ✞ இந்தியாவிலுள்ள வடகிழக்கு மாநிலங்களான மிசோரம், நாகலாந்து, மேகலாயா ஆகிய மாநிலங்களில் 95% பேர் கிறிஸ்தவர்கள் உள்ளனர்.
- ✞ இந்தியாவில் சுமார் 5–கோடிக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் உள்ளனர்.
- ✞ இந்தியாவில் சுமார் 1–கோடி பேர் இரகசிய கிறிஸ்தவர்களாக உள்ளனர்.
- ✞ இந்தியாவில் சுமார் 30% கிறிஸ்தவர்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.

- ✞ இந்தியாவில் மாதத்திற்கு 200– ஆவிக்குரிய சபைகள் உருவாகின்றன.
- ✞ இந்தியாவில் தினமும் 6,000–பேர் சபைகளில் சேர்க்கப்படுகின்றனர்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்களின் உழைப்பும், பணமும் 90% கிறிஸ்தவர்களிடையே நடைபெறும் ஊழியங்களுக்காக செலவிடப்படுகிறது.
- ✞ இந்தியாவிலுள்ள வேதாகமக் கல்லூரிகளில் படிக்கும் வாலிப சகோதர, சகோதரிகளில் சுமார் 10% பேரே ஊழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
- ✞ இந்தியாவிலுள்ள 28,000 – பின்கோடுகளில், 18,000–பின் கோடுகளில் ஒரு கிறிஸ்வ ஊழியர் கூட இல்லை.
- ✞ இந்தியாவில் மனிதர்களைக் கொன்று சாப்பிடும் சில பழங்குடி ஆதிவாசிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதால் அநேகர் மனம் மாறியுள்ளனர்.
- ✞ இந்தியாவில் வடபீகார் மிகக் குறைந்த அளவு சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட, ஆனால் மிக அதிகமான மக்கள் தொகை உள்ள பகுதியாகும்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்களின் மேம்பாட்டிற்காக வெளிநாட்டிலிருந்து வரும் உதவிகளை மதவாத இயக்கங்கள் தடைச் செய்து வருகின்றது.
- ✞ இந்தியாவில் சிறுபான்மையினரின் பத்திரிகைச் சுதந்திரத்தை தடை செய்யும் நோக்கத்துடன் மதவாத இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன.
- ✞ இந்தியாவில் ஜாதி, மத அடிப்படையில் பிரிவினையைத் தூண்டி கிறிஸ்தவர்களை அடக்குவதில் மதத்தீவிரவாதிகள் செயல்படுகின்றனர்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்களாக மாறிய தலித் மற்றும் பழங்குடி கிறிஸ்தவர்களை மீண்டும் மதம் மாற்ற மதத்தீவிரவாதிகள் வலியுறுத்துகின்றனர்.

## குழந்தை ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

*நீங்கள் அனுப்பும் குழந்தை ஆதரவுத் தொகையை* **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிகவும் தாழ்மையாக கேட்கிறோம். இவ்வாறு நீங்கள் அனுப்பும் போது நாங்கள் அதை **Shalom Charity Mission -** கணக்கில் கொண்டு வந்து, ஆதிவாசி சிறுவர்களுக்கென்று பயன்படுத்த உதவியாக இருக்கும்.

மேலும் நீங்கள் வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும்போது மறவாமல் எங்களுக்கு தெரியப்படுத்த அன்புடன் கேட்கிறோம். இல்லையென்றால் காணிக்கை செலுத்தியது யார் என்பது தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

£ßûUIThPYuúUp £kûRÙs [Yu Tôd¡VYôu;
¾eÏ Sô°p LojRo AYû] ®Ó®ITôo. Ne¸Rm 41:1

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **“கல்வி அறிவு வளர்ச்சி”** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

*மேலும் குழந்தை ஆதரவுத் தொகை* அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

## உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...

***அன்பான ஆதரவாளர்களே,***

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# `ôúXôm ª`ù]¬ ù_TdáÓûL

| நாள் | நேரம் |
|---|---|
| **11.08.2012, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| நாள் : | நேரம் : |
|---|---|
| **18.08.2012 (சனிக்கிழமை)** | **அதிகாலை 12.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை 24 மணிநேரம்** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்

**"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." (கலாத்தியர் 6:2)**

## GÝkÕ LhÓúYôm YôÚeLs...



வளர்ந்து வரும் நம் ஷாலோம் மிஷனெரி பணித்தளங்களில் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கூட்டங்கள், பயிற்சிகள் மற்றும் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்ற மாதந்தோறும் ரூ. 5 இலட்சங்களுக்கு அதிகமாக தேவைப்படுகிறது. அதை சந்திப்பதற்காக ஜெபத்துடன் மாதந்தோறும் ரூ. 500 கொடுக்கக் கூடிய ஷாலோம் ஊழிய பங்காளர்கள் 1000 பேர்கள் மிக அவசரமாக தேவை.

இந்த இதழை வாசிக்கும் அன்பானவர்களே, இதுவரை நீங்கள் ஷாலோம் ஊழியத்திற்கு உதவி செய்யவில்லையெனில், உடனடியாக ரூ.500 மாதம் அனுப்பி ஜெபித்து ஷாலோம் ஊழிய பங்காளராக இணையுங்கள். மேலும் இந்த ஷாலோம் ஊழியங்களை ஏதாவது 2 பேருக்கு அறிமுகம் செய்து, ஊழிய பங்காளராக இணைத்து வைக்க அன்புடன் கேட்கிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## தேசத்திற்கான ஜெபக்குறிப்புகள்

1. இந்தியாவை ஆளுகைச் செய்யும் பிசாசின் வல்லமைகள், அசுத்த வல்லமைகள், அந்தகார வல்லமைகள் வெளியேற... (எரேமியா 10:11)
2. இந்தியாவிலுள்ள 120 கோடிக்கும் அதிகமான எல்லா ஜனங்களும் இயேசுவை தெய்வமாக அறிந்து கொள்ள.. (I தீமோ. 2:4)
3. இந்தியாவிலுள்ள ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர்கள், அமைச்சர்கள், M.P.-க்கள், M.L.A.–க்கள், உயர் அதிகாரிகள், அலுவலர்கள் கர்த்தருக்குப் பயந்து உண்மையாக தேசத்திற்காக தொண்டு செய்யவும், அவர்களின் பாதுகாவல் மற்றும் அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும் (I தீமோ. 2:2)
4. இந்தியாவில் கொலை, கொள்ளை, குடி, போதை, விபச்சாரம், வேசித்தன பாவப்பழக்கங்களிலுள்ள ஜனங்கள் இரட்சிக்கப்பட... (எசே. 34:27)
5. இந்தியாவிலுள்ள தீவிரவாதிகள், மந்திரவாதிகள், நக்சலைட்டுகள், ஜாதி, மதக் கலவரங்களைத் தூண்டுபவர்கள் மனம்திரும்ப... (எசா. 45:23)
6. இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்க திரளான ஊழியர்கள், மிஷனெரிகள் எழும்ப, எல்லா இடங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட.. (மத். 9:37,38)
7. இந்தியாவில் ஐந்து விதமான ஊழியஞ்செய்யும் ஊழியர்களைத் தேவன் அக்கினி ஜுவாலையாய் வல்லமையாகப் பயன்படுத்த... (சங். 104:4)
8. இந்தியாவில் நடைபெற்று வரும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட, சபைகள் ஸ்தாபிக்கப்பட, ஆத்துமாக்கள் திரளாய் சேர்க்கப்பட... (அப். 2:47; 9:31)
9. இந்தியாவிற்காக திறப்பிலே நின்று ஜெபிக்கும் முழங்கால் யுத்த ஜெபவீரர்களைத் தேவன் திரள்திரளாய் எழுப்ப... (எசே 22:30)
10. இந்தியாவில் தேவன் பின்மாரி மழையை ஊற்ற, மிகப்பெரிய எழுப்புதலை கட்டளையிட... (சக 10:1)

---

### *முழு இரவு ஜெபம் – CSI சகல பரிசுத்தவான்களின் ஆலயம் சுப்பிரமணியபுரம்.*

**13.07.2012** வெள்ளி அன்று சுப்பிரமணியபுரம், CSI சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் நடைபெற்ற முழு இரவு ஜெபத்தினை நமது ஷாலோம் ஊழியர்கள் நடத்த தேவன்கிருபை செய்தார். பாடல் மற்றும் ஆராதனை வேளைகளை **சகோ. ஆலன்** அவர்கள் நடத்தினார்கள். **சகோ. டேவிட்** அவர்கள் ஜெபவேளையை நடத்தி, தேவ செய்தியளித்தார்கள். **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்கள், ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. ராஜமாணிக்கம்** அவர்கள் இசை மீட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

இதை ஏற்பாடு செய்த **சகோ. பிரின்ஸ்** அவர்களுக்கும், இந்த வாய்ப்பினை வழங்கிய சேகரகுரு **Rev. தாமஸ் தேவதாசன்** அவர்களுக்காகவும், சபை அங்கத்தினர் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

◎ 600க்கும் அதிகமான ஆராதனை குழுக்களுக்காக, 240க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் மற்றும் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வெள்ளிதோறும் நடைபெற்றுவரும் அற்புத உபவாச கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக புதிதாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** அவர்களையும், Media & Communication துறைகளை நிர்வகிக்க பொறுப்பேற்றுள்ள **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் பயன்படுத்த, ஆசீர்வாதமாக உருவாக ஜெபியுங்கள்.

◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் **சகோதரி ஷெக்கினா** அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

◎ 485க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Projcet மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**நல்ல பருவ மழையைத் தேவன் தர...**

◎ இந்த வருடம் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் தேவையான அளவுக்கு மழை பெய்யவும், நம் பீல் மக்கள் விவசாயத்தின் மூலமாக ஆசீர்வதிக்கப்படவும், அவர்களை தேவன் பொருளாதாரத்தில் உயர்த்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் கிராம ஆலயங்கள்...**

◎ கர்த்தருக்கு சித்தமானால், இவ்வருட இறுதிக்குள், 100 ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள். கிராம சபைகள் கட்ட அனுமதிகள் சரியாக கிடைக்கவும், கட்டுமான வேளையில் எதிர்ப்புகள் நீங்கவும், தேவையான நிதி உதவி கிடைக்கப் பெறவும், ஸ்தலசபைகள் உற்சாகமான காணிக்கை தந்து உதவிபுரியவும் ஜெபியுங்கள்.

**ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காக...**

◎ ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கிவரும், மிஷனெரி ஆதரவாளர்கள், குழந்தை ஆதரவாளர்கள், கிராம ஆதரவாளர்கள், ஆலயக் கட்டுமான ஆதரவாளர்கள், ஷாலோம் பங்காளர்கள் மற்றும் அநேக காரியங்களை அவ்வப்போது தாங்கிவரும் ஆதரவாளர்கள், மாதந்தோறும் தங்களால் இயன்ற காணிக்கைகளைக் கொடுத்து ஊழியங்களைத் தாங்கி வரும் ஆதரவாளர்கள் அனைவரையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

◎ ஆதரவாளர்கள் செய்கின்ற வேலைகள், தொழில்கள் வியாபாரங்கள் மற்றும் ஊழியங்கள் அனைத்தையும் தேவன் ஆசீர்வதிக்கவும், தேவைகளை சந்திக்கவும், பொருளாதார பிரச்சினைகள் மாறவும், வீட்டில் சந்தோஷம் சமாதானம் நிலவவும் அவர்கள் பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

◎ ஆதரவாளர்களில் தேவைகளோடு காத்திருப்போருக்காகவும், வேலைக்காக காத்திருப்போருக்காகவும், திருமணத்திற்காக காத்திருப்போருக்காகவும், குழந்தைச் செல்வங்களுக்காகக் காத்திருப்போருக்காகவும், பொருளாதாரத்தில் கஷ்டப்படுவோருக்காவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் ஊழியங்களைத் தாங்கிவரும், ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும், சபைகளுக்காகவும், ஜெபியுங்கள் ஊழியங்களில் பெரிய அறுவடையை தேவன் கொடுக்கவும், ஊழியத் தேவைகளை சந்திக்கவும், அவர்கள் சபைகளை தேவன் கட்டவும் ஜெபியுங்கள்.

◎ நமது ஊழியங்களுக்காக காணிக்கைகளை சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்காகவும், ஊழியங்களை ஜெபங்களினாலும், ஆலோசனைகளினாலும் தாங்கிவரும் செயற்குழு உறுப்பினர்களுக்காகவும் அவர்கள் குடும்பங்களுக்காவும் ஜெபியுங்கள்

**ஊழியங்களில் வரும் தடைகள் நீங்க...**

◎ ஊழியங்கள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக வரும் மனுஷீக வல்லமைகள், எதிர்ப்புகள், போராட்டங்கள் மேலும் அந்தகாரத்தின் கிரியைகள், விரோதமாக செயல்படும் அதிகாரங்கள் நீங்கவும் ஊழியர்களுக்கு தேவன் நல்ல பாதுகாவலைத் தரவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

◎ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர்வசதிகளுக்காவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் பள்ளிக் கூடங்களுக்கு நல்ல வசதியான கட்டடங்கள் கிடைக்கப் பெறவும், பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறவும், இந்த உலகிற்கு ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 950க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும் சுகம் பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

◎ விடுதி காப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காவும், புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்து கல்வி பொருட்களுக்கான தேவைகளை தேவன் சந்திக்கும்படியாக ஜெபியுங்கள்.

◎ Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

◎ எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**எதிர்காலத் திட்டங்களுக்காக...**

◎ 3 மாநிலங்களிலும் 3 திருமண்டலமாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியே பேராயர்கள் ஏற்படுத்தப்படவும். சபை ஒழுங்குகள் சரிவர செய்யப்படவும் ஜெபியுங்கள்.

◎ தேவனுக்கு சித்தமானால், 2015க்குள், 1000 திருச்சபைகள் மற்றும் 1000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும், 10 இலட்ச ஆத்துமாக்கள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

◎ பணித்தள அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகம் கட்டட விரிவாக்கத்திற்காக ஜெபியுங்கள்.

◎ ஊழியர்கள் கூட்டங்கள் மற்றும் இதர முகாம்கள் நடத்த வசதியான Meeting Hall கட்டப்பட ஜெபியுங்கள்.

◎ தேவனுக்குச் சித்தமானால், ஆடியோ, வீடியோ படப்பிடிப்பு மற்றும் எடிட்டிங் பண்ணக்கூடிய அளவிற்காக சாதனங்கள் வாங்கப்பட்டு வீடியோ ஆடியோ நிலையங்கள் உருவாக்கப்பட தேவையான நிதி உதவி மற்றும் அதற்கேற்ற ஊழியர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.



சுதேச ஊழியர் சாட்சி

# ஜோர்சிங் B. புரியா

பிட்டோல், மத்தியப்பிரதேசம்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! என் பெயர் ஜோர்சிங் புரியா. நான் மத்தியப்பிரதேசம் மாநிலத்தினைச் சேர்ந்த ஜாபுவா மாவட்டத்திலுள்ள பிட்டோல் கிராமத்திலுள்ள பீல் ஆதிவாசி. எங்கள் கிராமம் மிகவும் அந்தகாரத்தினால் நிறைந்த பகுதியாகும். எங்கள் கிராம மக்கள் கொள்ளையடிப்பது, சாராயம் குடிப்பது, வில் அம்புகளைக் கொண்டு ஒருவருக்கொருவர் சண்டை போட்டுப் பகையை உண்டு பண்ணுவது போன்ற காரியங்களைப் பொழுதுபோக்காகக் கொண்டவர்கள். இயேசு என்ற பெயரினைக் கூட கேள்விப்படாதவர்கள். மேலும் கொலை செய்வதற்கு கொஞ்சமும் அஞ்சாத முரட்டாட்டமான ஜனங்கள். எங்கள் பகுதியின் வழியாக 7 மணிக்கு மேல் வாகனங்கள் செல்லவேண்டுமானால் போலீஸ் பாதுகாவலுடன் தான் செல்ல வேண்டும்.

இப்படிப்பட்டதான சூழ்நிலையில் வாழ்ந்து வந்த என்னுடைய குடும்பத்தில், எனது மகள் திடீரென்று சுகவீனம் அடைந்தாள். மருத்துவரிடம் சென்றோம் பலனில்லை. வியாதி அதிகரித்து எனது மகள் மரித்துப் போகும் நிலையில் இருந்தாள். மருத்துவர்கள் கைவிட்டனர். என்ன செய்வதென்று தெரியாத சூழ்நிலையில் இருக்கும்போது, எங்கள் பகுதியில் ஊழியம் செய்து வந்த ஒரு சுதேச ஊழியரைக் குறித்துக் கேள்விப்பட்டேன். அவரிடம் எனது மகளைத் தூக்கிச் சென்றேன். அவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து எனக்குக் கூறி எனது மகளுக்காக மிகவும் பாரத்துடன் ஜெபித்தார். தேவன் ஜெபத்தினைக் கேட்டு எனது மகளுக்கு பூரண சுகத்தினைக் கொடுத்தார். இந்த அற்புதத்தினைப் பெற்றுக் கொண்ட நாங்கள் ஜீவனுள்ள தேவனை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டு, எங்கள் கிராமத்தின் அருகிலுள்ள கேடி என்ற கிராமத்தில் நடைபெறும் ஆலய ஆராதனைகளில் பங்கேற்றோம்.

அதன்பின் ஊழியம் செய்யும்படியான வாஞ்சையினை தேவன் தந்தபடியினால், அந்த சுதேச ஊழியருடன் இணைந்து ஊழியம் செய்துவந்தேன். தேவன் என்னை பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து ஊழியத்தின் பாதையில் நடத்த ஆரம்பித்தார். கடந்த 1999ம் ஆண்டு ஜனவரி மாதம் நாலுமாவடி திறப்பின் வாசல் ஜெபத்தில் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் மூலமாக குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு, எனது சொந்த கிராமத்தினை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறோம். எனக்காகவும், எனது மனைவி மித்துபேன் மற்றும் பிள்ளைகளுக்காகவும், நாங்கள் செய்து வரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Bro. Victor P. Lawrence, Ambush Prayer Army, Madurai**

"He has made everything beautiful in its time." Ecc. 3:11

# Wedding Invitation

**Mrs. Vahitha Devadass & Rt. Rev. Dr. V. Devadass**

(Founders of Sharing Love Mission, Shalom Diocese in India, Shalom Charity Mission)

*request the pleasure of your presence with family and friends*

*on the auspicious occasion of the marriage*

*of their beloved elder son*



**D. GLADSON TITUS** M.B.A.,

(Director, Development Project Shalom Mission)

(Grandson of Mr. J. Vedamani & Mrs. Joy Vedamani, Sivakasi and Mr. G. Arulraj & Mrs. Grace Arulraj, Thoothukudi)

*with*

**R. MERLIN CHARLOTTE** M.C.A.,

(D/o. Mr.J.S.Rajan & Mrs.Ruby Rajan, Granddaughter of Liberty Mr. P.M.Joseph & Mrs. Leela Joseph, Sivakasi and Mr. A.David & Mrs. Balammal, Virudhunagar)

*to be solemnized by*

**Rt. Rev. Dr. J.A.D. Jebachandran** *(Bishop in Thoothukudi - Nazareth Diocese)*

*and* **Rt. Rev. Dr. J.J. Christdoss** *(Bishop in Tirunelveli Diocese)*

*on Monday the 6th August, 2012 at 9.30 a.m at CSI Caldwell Memorial Church,*

*Caldwell Colony, Thoothukudi.*

*And thereafter to the reception at Abirami Mahal, Thoothukudi in the presence of beloved*

**Bro. Mohan C. Lazarus** *(Jesus Redeems, Nalumavadi)*



"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்" பிரசங்கி 3:11

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நிகழும் 2012–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6–ம் தேதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு

சிவகாசி, திரு. J. வேதமணி & திருமதி. ஜாய் வேதமணி, தூத்துக்குடி, திரு. G. அருள்ராஜ் & திருமதி. கிரேஸ் அருள்ராஜ் இவர்களின் பேரனும், எங்கள் அன்பு மூத்த மகனுமான

**D. கிளாட்சன் டைட்டஸ்** M.B.A.,

சிவகாசி, லிபர்ட்டி திரு. P.M. ஜோசப் & திருமதி. லீலா ஜோசப், விருதுநகர், திரு. A. டேவிட் & திருமதி. பாலம்மாள் இவர்களின் பேத்தியும், திரு. J.S. ராஜன் & திருமதி. ரூபி ராஜன் இவர்களின் அன்பு மகளுமான

**R. மெர்லின் சார்லட்** M.C.A.,

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, தூத்துக்குடி, கால்டுவெல் காலனி CSI கால்டுவெல் நினைவு ஆலயத்தில் வைத்து **Rt. Rev. Dr. J.A.D. ஜெபச்சந்திரன்** (தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலப் பேராயர்) மற்றும் **Rt. Rev. Dr. J.J. கிறிஸ்துதாஸ்** (திருநெல்வேலி திருமண்டலப் பேராயர்) ஆகியோர் நடத்தி வைக்கும் திருமண ஆராதனைக்கும் அதன்பின் தூத்துக்குடி, அபிராமி மஹாலில் வைத்து அன்பு சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்கள் முன்னிலையில் நடைபெறும் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் அன்புள்ள,

**Rt. Rev. Dr. V. தேவதாஸ் & திருமதி வஹிதா தேவதாஸ்**

(Founders of Sharing Love Mission, Shalom Diocese in India, Shalom Charity Mission)

## சமுதாய மறுரூபமாக்கல் பயிற்சி - 02&05-07-2012



பயிற்சியினை துவக்கி ஜெபம் : பிஷப் தேவதாஸ்& சகோதரி வஹிதா தேவதாஸ்



ஆராதனை வேளை




இராஜஸ்தான் பயிற்சி குழு மற்றும் மாணவர்கள்




குஜராத் பயிற்சி குழு மற்றும் மாணவர்கள்

## பீல் ஆதிவாசி மாணவர் ஆசீர்வாதக் கூடுகைகள் - 12,14&15-07-2012



ஆதரவாளர்களுக்கு நன்றிக்கடிதம் எழுதும் மாணவ, மாணவிகள்



ஆசீர்வாத செய்தி மற்றும் ஆலோசனைகள் : சகோதரி வஹிதா தேவதாஸ்





கூடுகைகளில் பங்கேற்ற மாணவ மாணவிகள்

# úNYôTôWj - NØRôVUß ìTUôdLp T« t£L° u ÕYdL®Zô

**குஜராத் - 02.07.2012, இராஜஸ்தான் - 05.07.2012**

## (Institute of Community Transformation)

கர்த்தருடைய பெரிதான கிருபையால், **ஷாலோம் ஊழியங்களும் சேவா பாரத் நிறுவனமும்** இணைந்து **சமுதாய மறுரூபமாக்கல் திட்டம்** மற்றும் **முதியோர் கல்வி** போன்ற சமுதாய பணிகளை செய்து வருகின்றன. தற்போதும் Seva Bharat ஸ்தாபனத்தின் மூலம் மேலும் 2 புதிய **சமுதாய மறுரூபமாக்கல் திட்டங்களைச் (I.C.T**.) செய்யும்படியாக தேவன் கிருபை செய்துள்ளார். ஒன்று குஜராத் மாநிலத்திலும் மற்றொன்று இராஜஸ்தான் மாநிலத்திலும் நடைபெறுகின்றன. குஜராத் **I.C.T**- க்கான பயிற்சி துவக்கவிழா **02.07.2012** அன்று சோட்டா உதய்பூர் பகுதில் நடைபெற்றது. இதில் **நமது பேராயர் தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஜெபித்து மெழுகுவர்த்தி ஏற்றி துவக்கி வைத்தார்கள். சேவா பாரத் குஜராத் ஒருங்கிணைப்பாளர் **திரு. அமித் யாத்ரி** அவர்கள் Seva Bharat நிறுவனத்தைக் குறித்தும், **I.C.T. –**ஐ குறித்தும் விளக்கினார்கள். குஜராத் (சோட்டா உதய்பூர்) **I.C.T. –**யின் விபரம் கீழ்வருமாறு :

இந்த குஜராத் (சோட்டா உதய்பூர்) **I.C.T.–**யின் இயக்குநராக **சகோ. பாவ்சிங் கட்டாரா** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். தொடர்ந்து பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாக **சகோதரி. வஹிதா தேவதாஸ், சகோ. கேரட், சகோ. ரமேஷ் கட்டாரா** மற்றும் **போதகர். வில்சன் சங்காடா** ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று இராஜஸ்தான் பிரதாப்கட் பகுதியின் **ஐ.சி.டி–**யின் துவக்க விழா **05.07.2012** அன்று நடைபெற்றது. இதில் சேவா பாரத் குஜராத் ஒருங்கிணைப்பாளர் **திரு.சுந்தர்சிங்** அவர்கள் சேவா பாரத்–ஐ குறித்தும், **I.C.T.–**ஐ குறித்தும் விளக்கினார்கள். **சகோ.ஜெயராஜ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். **சகோ.கேரட்** அவர்கள் ஜெபம் செய்ய, **சகோ.சுந்தர்சிங்** அவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி துவக்கி வைத்தார்கள்.

இராஜஸ்தான் பிரதாப்கட் பகுதியின் **I.C.T. –**ன் இயக்குநராக **சகோ. அனில் சௌகான்** அவர்களும், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாக **போதகர். பாதர் பாரியா, போதகர். பத்யா கராசியா, போதகர். பாதர் டோடியார், போதகர். காந்திலால் கராசியா** ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த Programme-ல் முதலில் 1 மாதம் வேதாகமம் மற்றும் ஊழியப் பயிற்சி நடைபெறும். பின்பு 3 மாதம் களப்பணிகளுக்கு அனுப்பப்படுவார்கள். இப்படி வருடத்திற்கு 3 முறை இவர்களுக்கு பயிற்சியும் களப்பணிகளும் கொடுக்கப்படும். இதன் முடிவில் இந்த மாணவர்கள் தங்கள் கிராமத்தை முழுவதும் ஆதாயப்படுத்தி, விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து மக்களை இயேசுவண்டை வழிநடத்துவார்கள்.

# பீல் ஆதிவாசி மாணவர்கள் ஆசீர்வாதக் கூடுகைகள்

நமது ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வி வழங்கி வருகிறோம். நாம் ஆதரிக்கும் குழந்தைகள் அனைவருமே சிறப்பான தேர்ச்சியினை அடைந்துள்ளார்கள். மேலும் உங்கள் அனைவரின் ஜெபத்தினாலும், கடந்த கல்வியாண்டில் நாம் தாங்கி வரும் அனைத்து பீல் மாணவ, மாணவிகளும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்துள்ளனர். குறிப்பாக குஜராத்திலுள்ள மாணவர்கள் 10–ம் & 12–ம் வகுப்புத் தேர்வுகளில் 70 முதல் 85 சதவீதம் வரை மதிப்பெண்கள் பெற்றுள்ளார்கள். இராஜஸ்தான், பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள மாணவர்கள் 10–ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகளில் அதைக் காட்டிலும் சற்று குறைவாகவே மதிப்பெண்கள் பெற்றாலும், அனைவரும் தேர்வில் வெற்றி பெற்றது மகிழ்ச்சியான காரியமாகும். ஜெபித்து தாங்கின உங்கள் யாவரையும் தேவன் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக! **தேவனுக்கே மகிமை!**

தற்பொழுதும் இந்த கல்வி ஆண்டின் தொடக்கத்தில் நாம் ஆதரிக்கும் மாணவர்களை ஜெபித்து, ஆசீர்வதித்து உற்சாகப்படுத்தும்படியாக விசேஷித்த கூடுகைகள் ஜுலை மாதம் 12,14,மற்றும் 15 தேதிகளில் தாகோத் மற்றும் பிஜல்பூரில் நடத்தப்பட்டது. இக்கூடுகைகளில் நாம் தாங்கி வரும் அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள்.

அர்த்தமிகு பாடல்கள், ஆவியில் நிறைந்த ஆராதனை, ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் செய்தி ஆகியவை இச்சிறப்பு கூடுகையின் முத்தான நிகழ்வுகளாகும். மாணவர்கள் தங்கள் படிப்பில் தேவன் செய்த அதிசயங்களை விவரித்தது, மற்றவர்களின் விசுவாசத்தைத் தட்டி எழுப்பியது. இவர்களை ஆவிக்குரிய வாழ்வில் முன்னின்று நடத்தும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து புத்தியைக் குறித்து ஆலோசனை வழங்கி ஜெபித்தார்கள். இந்த கல்வி ஆண்டின் ஆரம்பத்தினை ஜெபத்துடன், தேவ ஆலோசனையுடனும் ஆரம்பித்த மகிழ்ச்சியில் விசுவாசத்தோடு மாணவர்கள் திரும்ப சென்றனர்.

மாணவர்கள் தங்களை ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்களுக்கு தங்கள் நன்றியை தெரிவிக்கும் வண்ணம் கடிதங்களையும் தங்கள் புகைப்படங்களையும் தந்தனர். இக்கூட்டங்களில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டது.

மேலும் இவர்களின் படிப்பிற்காக கல்வி ஆண்டில் தொடக்கத்தில் பள்ளிக் கட்டணம், விடுதிக் கட்டணம், பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை வழங்குவதற்காக அநேக தேவைகள் உண்டு. தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கவும், கொடுத்துத் தாங்கவும் அன்புடன் வேண்டுகிறோம். மேலும் நம்முடைய மாணவர்களில் 300 பேருக்கு ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்கள் இல்லை. தாங்கள் அவர்களுக்காகவும் ஜெபித்து, முடிந்தால் உங்கள் பங்குகளை அனுப்ப வேண்டுகிறோம். மட்டுமல்லாமல் இந்த மாணவர்களை தாங்கும்படியாக மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

**“நீங்கள் ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்;**

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன்” நெகேமியா–8:10**


# 10 இலட்சம் ஆத்தும ஆதாயப் பணியின் மூலம் ஜுலை மாதம் நடைபெற்றசுகமளிக்கும் கூட்டத்தின் சில சாட்சிகள்



**பெயர் : ஃபத்லி பேன்**
**வயது : 41**
**கிராமம் : டுக்கி அனோப்**
**மாவட்டம் : தாகோத்**
**மாநிலம் : குஜராத்**

எனது பெயர் ஃபத்லிபேன். நான் டுக்கிஅனோப் என்ற கிராமத்தைச் சேர்ந்தவள். எனக்கு ஒரு சில வருடங்களாக வயிற்றில் வலி ஏற்பட்டது. மிகவும் கஷ்டப்பட்டேன். மருத்துவரிடம் சென்ற போது எனக்கு வயிற்றில் கட்டி இருப்பதாக சொன்னார்கள். சிகிச்சை செய்ய பல ஆயிரம் ஆகும் என்று நினைத்து நான் செல்லவில்லை. இந்நிலையில் நன்டேலாவ் என்ற கிராமத்தில் ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் எனக்கு இயேசு சுகம் தருவார் என்ற விசுவாசத்துடன் பங்கு பெற்றேன். தேவன் என் விசுவாசத்தை கனப்படுத்தி எனக்கு சுகம் கொடுத்தார். எனது வயிற்றில் இருந்த கட்டி மறைந்தது. சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

---



**பெயர் : சவாபாய்**
**வயது : 40**
**கிராமம் : பாட்டன்புரா**
**மாவட்டம் : தாகோத்**
**மாநிலம் : குஜராத்**

எனது பெயர் சவாபாய். நான் பாட்டன்புரா என்ற கிராமத்தைச் சேர்ந்தவன். எனக்கு வயிற்றில் அவ்வப்போது வலி ஏற்படும். திடீரென்று எனது வயிறு வீங்க ஆரம்பித்தது. ஒரு கர்ப்பிணி பெண்ணுக்கு எப்படி வயிறு காணப்படுமோ அந்த அளவிற்கு வீங்கி விட்டது. என்ன காரணம் என்றே தெரியவில்லை. இந்நிலையில் பாட்டன்புரா என்ற கிராமத்தில் ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்று, வசனத்தைக் கேட்டேன். நான் சுகமாகி விடுவேன் என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது. போதகரும் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபித்த ஒரு சில மணி நேரத்திலேயே எனது வயிற்றில் இருந்த வீக்கம் குறைந்து, எனது வயிறு சாதாரணமாக மாறியது. எனக்கு சுகம் கிடைப்பதற்கு இயேசு தான் காரணம். அவருக்கே மகிமை!

ஆலய வரலாறு
Church History

# கால்டுவெல் நினைவு ஆலயம்,

## கால்டுவெல்காலனி, தூத்துக்குடி.

கால்டுவெல் பள்ளியில் பணி செய்த ஆசிரியர்கள் மற்றும் அவலுவலர்கள் அனைவரும் சேர்ந்து, பிஷப் கால்டுவெல் நினைவாக கால்டுவெல் நலக்குழு என்ற நலக்குழுவை ஆரம்பித்து பனைமரங்களும், மணல் மேடுகளும், மணற்பாங்கான இடமாக இருந்து இடத்தை **1968**ம் ஆண்டு வாங்கினார்கள். அந்த இடத்திற்கு கால்டுவெல் காலனி என்று பெயர் வைத்தார்கள். இதற்கு அதிகம் முயற்சி செய்தவர்கள் அப்போது கால்டுவெல் பள்ளியில் பணி செய்த திரவியம் எழுத்தர், ஆசீர்வாதம் ஆசிரியர் **V.D. ஆபிரகாம்** தலைமை ஆசிரியர் மற்றும் பலராவர்.

**1973**ம் ஆண்டு சிலர் அங்கு வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் கடன் கொடுக்கப்பட்டு **63** வீடுகள் கட்டப்பட்டன. ஆரம்பத்தில் மின்சாரம் மற்றும் சாலை வசதிகள் கிடையாது. தூத்துக்குடி – திருச்செந்தூர் முக்கிய சாலையில் இருந்து கால்டுவெல் காலனிக்கு வருவதற்குள் முகம், உடம்பு முழுவதும் மணலாகிவிடும். காற்றுக் காலத்தில் மிக அதிகமாக மணல் அள்ளித்தட்டும், வழித்தடத்தையும் மணம் மூடிவிடும்.

ஆரம்ப காலத்தில் சிலர் தாங்கள் கட்டிய வீடுகளில் குடியேறவில்லை. அந்த வீடுகளில் வாடகைக்குக் கூட மக்கள் வந்து குடியேறாமல் காலியாக இருந்தன. **1976**ம் ஆண்டு ஐந்து வீடுகளில் மக்கள் குடியேறினர். குடியேறியவர்கள் சுற்றியுள்ள இதர ஆலயங்களுக்குச் சென்று கொண்டிருந்தனர். **1977**ம் ஆண்டு ஆரம்பத்தில் சில கிறிஸ்தவர்கள் சேர்ந்து **திரு. ஜாண் எபநேசர்** அவர்கள் வீட்டின் முன் சாய்வாக ஓலை வேய்ந்து அதில் ஆராதனைகளை ஆரம்பித்தனர். அங்கு இரண்டு மாதங்கள் நடத்தப்பட்டன. சண்முகபுரம் சேகரகுரு **அருள்திரு. A. பிரெட்ரிக் சாமுவேல்** அவர்கள் கால்டுவெல் காலனி கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தினார்கள். மேலும் அங்கு திருவிருந்து ஆராதனை நடத்த சாத்தியமில்லாதிருந்தபடியால் **திரு. டேனியல்** அவர்கள் வீட்டில் (காலஞ்சென்ற டாக்டர் ஜாண்பால் அவர்கள் மருத்துவமனை இருக்கும் இடம்) மூன்று மாதம் ஆராதனை நடைபெற்றது. அதற்குள் கால்டுவெல் காலனியில் ஆலயத்திற்கென்று ஒதுக்கப்பட்ட **17.5** சென்ட் நிலத்தில் ஓர் ஓலையால் வேயப்பட்ட ஆலயம் ஒன்றினைக் கட்டி, **1977**ம் ஆண்டு இறுதியில் ஆராதனை அங்கு நடத்தப்பட்டது. அப்பொழுது பத்து குடும்பங்கள் மட்டுமே கிறிஸ்தவக் குடும்பங்களாக இருந்தன. முதல் சபை ஊழியராக கால்டுவெல் மேல்நிலைப்பள்ளியில் எழுத்தராக பணி செய்து பணிநிறைவு பெற்ற **திரு. மனுவேல் விக்டர்** அவர்கள் மிகச் சிறப்பாக சபை ஊழியராகப் பணி செய்தார்கள். சபை ஊழியராக இருந்து கொண்டே பெடல் ஆர்கன் வாசித்து பாடல் பாடுவார்கள்.

இந்தக் காலகட்டத்தில் கால்டுவெல் பள்ளியில் பணி செய்து பணி நிறைவு பெற்ற

**திரு. I.D. தேவாசீர்வாதம்** அவர்கள் கௌரவ குருவாக அருள்பொழிவு பெற்று, கால்டுவெல் காலனியிலுள்ள தங்கள் வீட்டில் குடியேறினார்கள். கிறிஸ்தவ வீடுகளின் எண்ணிக்கையும் ஐம்பதாக பெருகியது. 1981ம் ஆண்டிலே கால்டுவெல் காலனி திருச்சபையில் பாடகர்குழு ஆரம்பிக்கப்பட்டது. **திரு. J. அற்புதராஜ் மார்காஷிஸ்** ஆசிரியர் அவர்கள் பாடகர் குழு தலைவராகச் செயல்பட்டார்கள். ஞாயிறு பள்ளி, பெண்கள் கூட்டம், வாலிபர் ஆண்டகள் பெண்கள் கூட்டம் மிகச் சிறப்பாக செயல்பட்டன.

ஓலைக் கூரை ஆலயத்துக்கு அருகிலேயே புதிய ஆலயத்திற்கும் 1981ம் ஆண்டு சண்முகபுரம் சேகரகுரு **அருள்திரு T. சாமுவேல் ஐயரவர்களால்** அஸ்திபாரம் போடப்பட்டது. கௌரவகுரு **அருள்திரு. I.D. தேவாசீர்வாதம்,** சபை ஊழியர் மற்றும் சபையின் மூப்பர்கள் ஜெபத்தோடு தங்கள் பலத்துக்கும் வயதிற்கும் மிஞ்சி தியாக சிந்தையுடன் உழைத்த உழைப்பின் பலனாக, ஆலய வேலைகள் நிறைவு பெற்று 16.02.1985ம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல பேராயர் **ஜேசன் S. தர்மராஜ்** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1985ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் சண்முகபுரம் சேகரத்தில் இருந்து சிதம்பரநகர் சேகரம் புதிதாக உருவாக்கப்பட்டது. கால்டுவெல் காலனி திருச்சபை சிதம்பரநகர் சேகரத்துடன் இணைக்கப்பட்டது. கால்டுவெல் காலனியில் வீடுகள் பெருகின. மக்கள் விரும்பிக் குடியேறுகிற இடமாக கால்டுவெல் காலனி உருவானது. ஆலயம் நிரம்பி வழிந்தது. முதல் சபை ஊழியர் **திரு. மனுவேல் விக்டர்** அவர்கள் 1999ம் ஆண்டு கிறிஸ்துவின் ராஜ்யம் சேர்ந்தார்கள். அவரைத் தொடர்ந்து திரு. மோகன் ஆசிரியர் அவர்கள் சபை ஊழியராக மூன்று மாதம் பணி செய்தார்கள். அதனைத் தொடர்ந்து 1999ம் ஆண்டு ஏப்ரல் மாத்தில் இருந்து **திரு. J. ஸ்டீபன் ஜெயபால்** அவர்கள் பணி செய்து வருகிறார்கள். முதல் ஆலயப் பணியாளர் **திரு. ஜெயராஜ்** அவர்கள். இரண்டாவது ஆலயப் பணியாளராகத் தற்போது **திரு. K. பட்டுராஜ்** அவர்கள் பணி செய்து வருகிறார்கள்.

திருநெல்வேலி திருமண்டலத்திலிருந்து தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம் 24.10.2003ம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்டது. கால்டுவெல் காலனி திருச்சபையும் வேகமாக வளர்ந்து பெருகி 01.04.2005ஆம் ஆண்டு சிதம்பரநகர் சேரத்தில் இருந்து புதிய சேகரமாக உருவாக்கப்பட்டு முதல் சேகரகுருவாக சிம்பரநகர் சேகர குருவானவர் **அருள்திரு. P. செல்லப்பா** ஐயர் அவர்களே கால்டுவெல் காலனி சேகரத்துக்கும் சேகரத் தலைவராக நியமிக்கப்பட்டார்கள்.

2005ம் ஆண்டு மே மாதம் முதல் 2005 செப்டம்பர் மாதம் வரை **திரு. M.S.J. மைக்கேல்** அவர்கள் குருத்துவப் பயிற்சி ஊழியராக கால்டுவெல் காலனி திருச்சபையில் நியமிக்கப்பட்டு சிறப்பாக பணி செய்தார்கள்.

2005ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இருந்து அருள்திரு. **S.K. ஜெயசிங் ஐயர்** அவர்கள் கால்டுவெல் காலனி சேகரத்தலைவராகப் பொறுப்பெடுத்து சேகர எல்கையில் குடியேறி 2006ம் ஆண்டு மே மாதம் வரை பணி செய்தார்கள். 2006ம் ஆண்டு ஜுன்

மாதம் முதல் மீண்டும் **அருள்திரு. P. செல்லப்பா** ஐயரவர்கள் கால்டுவெல் காலனி சேகர குருவாக சிதம்பர நகர் சேரத்திலிருந்து பொறுப்பெடுத்தார்கள். 2007– ஜுன் முதல் கால்டுவெல் காலனி சேகர குருவாக **அருள்திரு. அறிவர் P. செல்லப்பா** ஐயரவர்கள் தனியாக நியமிக்கப்பட்டு 2012 மே மாதம் வரை சிறப்பாக பணி செய்தார்கள்.

1985ல் கட்டப்பட்ட கால்டுவெல் நினைவு ஆலயம் மிகவும் பழுதடைந்தது. மேலும் சபை மக்கள் பெருக்கத்தினால் பெரிய ஆலயம் கட்ட வேண்டும் என்று மக்கள் ஜெபித்தார்கள். ஆனால் பழைய ஆலயத்தை எவ்வளவு கஷ்டப்பட்டு பணம் பிரித்துக் கட்டினோம். அதை இப்படியா இடிப்பது என்று சிலர் கருத்து தெரிவித்தனர். சிலர் புதிய இடம் வாங்கி ஆலயம் கட்டலாம் என்று கருத்து தெரிவித்தனர். ஒரே குழப்பம். குழப்பத்தின் மத்தியில் ஜெபித்தார்கள் தெளிவு ஏற்பட்டது. அருள்திரு. **S.K. ஜெயசிங் ஐயா** அவர்கள் தலைமையில் உறுதியான தீர்மானம் எடுத்து ஆலயத்தை இடித்து, அதே இடத்தில் அடித்தளத்தில் சபா மண்டபமும், அதன் மேலே ஆலயத்துடன் கோபுரத்தையும் கட்டுவதென்று தீர்மானித்தார்கள். அப்பொழுது 120 குடும்பத்தினர் சபையில் இருந்தனர். ஆலயம் கட்டும் பொழுது ஆலய ஆராதனை எங்கே நடத்துவது என்று குழப்பம் ஏற்பட்டது. ஜெபித்து ஞானமாக முடிவெடுத்தார்கள். கால்டுவெல்காலனி முதல் தெருவில் அமைந்துள்ள சீன் திருமண மண்டபத்தை இரண்டு வருடத்திற்கு வெள்ளிக்கிழமைக்கும், ஞாயிற்றுக்கிழமைக்கு வாடகைக்கு எடுத்து ஆராதனை நடத்தினார்கள்.

புதிய ஆலயம், சபா மண்டபம், கோபுரத்திற்கு என்று 16.02.2007 அன்று தூத்துக்குடி – நாசரேத் திருமண்டல பேராயர் **Rt. Rev. Dr.J.A.D. ஜெபச்சந்திரன்** அவர்களால் அஸ்திபாரமிடப்பட்டது. வேலை வேகமாக நடந்து சபா மண்டபம் 16.02.2009 அன்று **Rt. Rev. Dr.J.A.D. ஜெபச்சந்திரன்** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அன்றிலிருந்து ஆலய ஆராதனைகள் சபா மண்டபத்தில் நடைபெற்றன. சபா மண்டபத்தின் மேலே புதிய பொலிவுடன் ஆலயக் கட்டுமானம் மக்களின் இடைவிடாத ஜெபத்தினாலும் அயராத உழைப்பினாலும் உதாரத்துவமான காணிக்கையினாலும் மிகத் துரிதமாக நடைபெற்று ஆலய வேலை நிறைவு பெற்று 26.01.21010 அன்று பேராயர் **Rt. Rev. Dr.J.A.D. ஜெபச்சந்திரன்** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஆலயம் கட்டி முடித்தாகிவிட்டது என்று சோர்ந்துவிடாமல் புதிய ஆலயம் கட்டிய உற்சாகத்தோடே தொடர்ந்து 75 அடி உயர கோபுரம் கட்டும் வேலை நடைபெற்றது. நம்முடைய பகுதி ஆலய கோபுரம் போல் இல்லாமல் புதிய வடிவத்தில் கோபுரம் கட்டப்பட்டு வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு கோபுர உச்சியில் நியான் விளக்கால் சிலுவை அமைக்கப்பட்டு கோபுர பிரதிஷ்டை கால்டுவெல் பேராயர் பிறந்த நாளை நினைவுகூறும் வண்ணம் 07.05.2012 அன்று பேராயர் **Rt. Rev. Dr.J.A.D. ஜெபச்சந்திரன்** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆலயத்தின் அடித்தளத்தில் உள்ள சபா மண்டபம், புதிய ஆலயம், கோபுரம் இவைகளைக் கட்டும் பணி அனைவரின் ஒத்துழைப்பாலும், கடினமான உழைப்பாலும், தியாகத்தோடு கூடிய உதாரத்துவமான காணிக்கையினாலும், வெற்றிகரமாக நிறைவுற்று ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.


**ஷாலோம் ஊழியங்கள் நடைபெறும் பிராந்தியங்களுக்காக கருத்தாய் ஜெபியுங்கள்.**

| மாநிலம் | மாவட்டம் | ஊழியம் நடைபெறும் தாலுகாக்கள் |
|---|---|---|
| குஜராத் | தாகோத் | தாகோத், ஜாலோத் பத்தேபூரா, லிம்கேடா கர்பாடா, தான்பூர், பாரியா |
| | பரோடா | சோட்டா உதய்பூர், கவாண்ட் |
| மத்தியப்பிரதேசம் | அலிராஜ்பூர் | பாபரா, ஜோபட் அலிராஜ்பூர், உதய்கட் |
| | படுவாணி | ராண்பூர், படுவாணி, |
| | ரத்லம் | பாஜ்னா |
| | தார் | தார் |
| | ஜாபுவா | ஜாபுவா, மேக்நகர் தாந்தலா, ராணாப்பூர் பேட்லாவத் |
| | சத்தர்பூர் | ராயி, பிஜாவர் |
| இராஜஸ்தான் | பான்ஸ்வாடா | குசல்கட், பாகிதோரா காட்டோல், கடி பான்ஸ்வாடா, |
| | உதய்பூர் | கேர்வாடா |
| | பிரதாப்கட் | பிரதாப்கட் |
| | டுங்கர்பூர் | டுங்கர்பூர் |

***நான் மோசேக்கு சொன்னபடி***
***உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும்***
***உங்களுக்குக் கொடுத்தேன்*** *– யோசுவா 1 :3*

மிஷனெரி முன்னோடிகள்

# - úVô ] ôoÓ úWYu ¶ p



**லியோனார்டு ரேவன்ஹில்** இங்கிலாந்து தேசத்தைச் சார்ந்த ஒரு கிறிஸ்தவ சுவிசேஷகர். **“ஜெபமும் எழுப்புதலும்”** என்ற புத்தகத்தின் ஆக்கியோனாவார். அப்போஸ்தலருடைய நடபடிகளில் கூறப்பட்டுள்ள சபையை தற்கால சபையுடன் ஒப்பிட்டு சவால் விட்ட சுவிசேஷகர். அவர் எழுதிய **“எழுப்புதல் தாமதிப்பது ஏன்?”** என்ற புத்தகம் உலகம் முழுவதும் பத்து இலட்சம் பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

ரேவன்ஹில் 1907ஆம் ஆண்டு இங்கிலாந்து யார்க்ஷயரில் உள்ள லீட்ஸ் என்ற இடத்தில் பிறந்தார். ரேவன்ஹில் இங்கிலாந்தில் உள்ள கிளிப் கல்லூரியில் கற்றார். சாமுவேல் சாட்விக் என்ற ஆசிரியரின் கீழ் ரேவன்ஹில் ஊழியப்பயிற்சியையும், வேதாகம அறிவையும் கற்றுக்கொண்டார். சபை வரலாற்று மாணவனாக இருந்த அவர், கிறிஸ்தவ எழுப்புதலில் ஆர்வமுடையவராக இருந்தார். இரண்டாம் உலகப்போரின் போது நடைபெற்ற அவரது சுவிசேஷக் கூட்டங்களில் ஏராளமான மக்கள் கூடினர். இரட்சிக்கப்பட்ட அநேகர் கிறிஸ்தவ ஊழியத்திற்கும் வெளிதேச ஊழியங்களுக்கும் செல்ல தங்களை அர்ப்பணித்தனர்.

1939ஆம் ஆண்டு ஐரிஷ் செவிலியராகப் பணிபுரிந்த மார்த்தா என்பவரை மணந்தார். அவர்களுக்குப் பவுல், டேவிட், பிலிப்பு என்ற மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். பவுலும் டேவிட்டும் கிறிஸ்தவ ஊழியக்காரராகவும் பிலிப்பு ஆசிரியராகவும் உள்ளனர். 1959ஆம் ஆண்டு ரேவன்ஹில் தனது குடும்பத்தினருடன் கிரேட் பிரிட்டனிலிருந்து அமெரிக்கா சென்றார். 1960ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள மாநிலங்களில் பயணம் செய்து எழுப்புதல் சுவிசேஷக் கூட்டங்களை நடத்தினார்.

1980ஆம் ஆண்டு ரேவன்ஹில் டெக்சாஸ் லிண்டேலில் உள்ள வீட்டிலிருந்து தனது கடைசிகால ஊழியத்தினை நிறைவேற்றினார். அவர் LDM–இல் வழக்கமாக வகுப்புகள் (பாடங்கள்) எடுத்ததுடன், கெய்த் க்ரீன் என்பவருக்கு அறிவுரையாளராகவும் இருந்தார். அவர் சில நேரங்களில் மினிசோட்டாவில் உள்ள பெத்தனி கல்லூரி ஊழியங்களிலும் டெக்சாசில் உள்ள செகுயினிலும் பாடம் கற்பித்தார்.

ரேவன்ஹிலால் கவரப்பட்ட பலரில் ரே கம்போர்ட், ரவி சகரியாஸ், டாமி டென்னி, ஸ்டீவ் ஹில், சார்லஸ் ஸ்டேன்லி, பில் கோதர்டு, பவுல் வாஷர் மற்றும் டேவிட் வில்கர்சன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**ரேவன்ஹில்லைப் பற்றி கீழ்க்கண்டவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறுகின்றனர் :**

ரேவன்ஹில்லின் நெருங்கிய நண்பரும், போதகருமான A.W. டோசர் கூறும்போது,

“ரேவன்ஹில் தனது புத்தகங்கள், உபதேசங்கள் மூலமாக புதிய ஏற்பாட்டு சபைக்கும் தற்கால சபைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை குறிப்பிட்டு, தற்கால சபைகளை புதிய ஏற்பாட்டு சபை கொள்கையோடு இணைந்து செல்லும்படி வலியுறுத்துவார்” என்று கூறினார்.

லியோனார்டு ரேவன்ஹில்லைப் பற்றி அறிந்தவர்கள் : “அவர், சபைக் கூட்டங்களை நடத்துவதற்காக அனுப்பப்பட்டவர் அல்ல, மாறாக கள்ளத்தீர்க்கதரிசிகளால் விலகிப்போன ஜனங்களை தேவனிடத்திற்கு திருப்ப அனுப்பப்பட்டவர்” என்று கூறுகிறார்கள்.

“கூட்டம் முடித்து, விலை உயர்ந்த ஓட்டல்களுக்குச் சென்று திருப்தியாக உண்டு, சுகபோகமாக வாழ்கிற சுவிசேஷகர்களைப் போல் அல்லாது, பரிசுத்த ஆவியானவர் தனக்குக் காட்டின வழியில் நடந்து ஊழியம் செய்தார். கிறிஸ்தவர்கள் எல்லா நேரமும், எங்கும் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவார்.”

மேலும் டோசர் கூறும்போது, “அவர் எண்பத்தி இரண்டு வயதாக இருக்கும்போது நான் அவரைப் பார்த்தபோது, அவர் மெதுவாகவும், நிலையற்றும் நடந்தார். சில நேரங்களில் நாற்காலியை விட்டு எழவும் அவருக்கு உதவி தேவையாயிருந்தது. 82 வயதிலும், லியோனார்டின் வார்த்தைகள் அக்கினியாகவும், உணர்த்தக்கூடியதாகவும் இருந்ததுமல்லாமல், அவருடைய கண்கள் என் ஆத்துமாவை உருவக்குத்துவது போலும் இருந்தது.”

“அவருடைய வயதான நாட்களில், வாரத்திற்கு ஒரு முறை ஜெபக்கூட்டம் நடத்தினார். பின்பு அது மாதத்திற்கு ஒரு முறைநடத்தப்பட்டது. அந்தக் கூட்டங்களிலும் போதகர்களும், சுவிசேஷகர்களும் கலந்து கொண்டனர். அந்த ஜெபக்கூட்டங்களில் நானும் 1989ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு லியோனார்டு மரிப்பதற்கு முன்புவரை கலந்து கொண்டேன். அந்த ஜெபக்கூட்டங்களில் கலந்து கொண்டபோதெல்லாம், ஒருமுறையேனும் லியோனார்டு சொன்ன சவால் நிறைந்த செய்திகளை கேட்காமல் விட்டதேயில்லை.”

லியோனார்டின் வரங்களில் ஒன்று, ஆவிக்குரிய நீதிமொழிகளை பேசி, அதனை ஜனங்களுக்குப் புரியவைக்கும் திறனாகும். அவைகள் சுருக்கமாகவும் தேவனைப் பற்றி அறிந்து கொள்ளவும், சபை மற்றும் உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் உதவும். நான் எப்பொழுதும் குறிப்பேட்டை கையில் வைத்துக்கொண்டு அவருடைய குறிப்புரைகளையும் நீதிமொழிகளையும் குறித்துக்கொள்வேன்.

கூட்டங்களில் லியோனார்டு கூறிய ஒருசில ஆவிக்குரிய மறைபொருள்களின் கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள :

- ✪ பிரபலமான சுவிசேஷகர் உங்களுடைய உணர்ச்சிகளை எட்டிப் பிடிக்கிறார். ஒரு உண்மை தீர்க்கதரிசி உங்களுடைய மனசாட்சியைத் தொடுகிறார்.

- “சபைக்கு இயேசு கிறிஸ்துவினுடைய கடைசி வார்த்தை மனந்திரும்பு”
- உண்மையான மேய்ப்பன் பாதையை காட்டுவதுமல்லாமல் அதில் நடக்கிறான்
- தீயைக் குறித்து நீங்கள் விளம்பரம் செய்யவேண்டியது இல்லை. தீ எரியும் போது ஒவ்வொருவரும் ஓடிவருவார்கள். அதுபோலவே, உங்களுடைய சபை அக்கினியாயிருந்தால் நீங்கள் அதைக்குறித்து விளம்பரம் பண்ண வேண்டியதில்லை. ஜனங்கள் அதை முன்னதாகவே அறிந்து கொள்வார்கள்”.
- நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினி. அவர் பெருமையையும் இச்சையையும் உலக வழக்கங்களையும், பாவங்களையும் சுட்டெரிக்கிறார்.
- இரண்டு விதமான நபர்கள் மாத்திரம் உண்டு; அவர்களில் ஒருவர் பாவத்தில் மரித்தவர் மற்றொருவர் பாவத்திற்கு மரித்தவர்.
- நீங்கள் இருட்டறையில் உட்கார்ந்திருக்கும்போது, நீங்கள் உட்கார்ந்து இருளை சபிக்கலாம் அல்லது நீங்கள் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றலாம்.
- குழந்தைகள் சேனல் 7 என்ன சொல்லுகிறது என்று சொல்ல முடியும். ஆனால் மத்தேயு 7 என்ன சொல்லுகிறது என்று தெரியாது.
- முதிர்ச்சி கீழ்ப்படிதலிலிருந்து வருகிறது. அது வயதின் முதுமையிலிருந்து வரவேண்டும் என்ற அவசியமில்லை.
- இயேசு இந்த உலகத்தில் நடத்தப்பட்டதை விட நாம் சிறப்பாக நடத்தப்படுவதற்கு ஏன் எதிர்பார்க்க வேண்டும்?.
- தேவன் நமக்கு, நாம் செய்யமுடியாததை செய்ய, அவருடைய வல்லமையை கொடுப்பதற்கு முன்பாகவே நாம் தேவனுக்காக எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும்.
- உங்களுடைய T.V. -யை (தொலைக்காட்சியை) அகற்றாதவர்கள், சாத்தானுடைய அரணை எப்படி உடைக்க முடியும்?
- கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் துன்பம் அனுபவிக்கவில்லையென்றால், ஏதோ தவறு உள்ளது.
- இன்றைய ஊழியக்காரர்கள் பிரசங்கிக்கிற இதே செய்தியை இயேசு பிரசங்கித்திருப்பாரென்றால், சிலுவையில் அறையப்பட்டிருக்கமாட்டார்.

லியோனார்டு ரேவன்ஹில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மரித்தார். அவருடைய உடல் டெக்ஸாசில் உள்ள கார்டன் வேலி என்ற கல்லறைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டது.

“NLX _ô§LÞdÏm
Ñ®úN`m Øk§I ©WNe¡dLITP úY i Óm”. மாற்கு 13:10

“¿eLs EXLùUeÏm úTôn, NoY £Úx¥dÏm Ñ®úN`jûRI
©WNe¡ÙeLs”. மாற்கு 16:15

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

---

நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : MBL0000106)**

---

AXIS BANK (U.T.I)

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank

**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

*ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.*

எக்வடோர் நாட்டின் தீவான கேலப்பகோஸ் தீவில் அமைந்திருக்கும் தேசியப் பூங்காவில் நூறு வயதான ஒரு அரிய ஆமை இறந்து விட்டதாக அந்த தேசியப் பூங்காவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தன்னந்தனி ஜார்ஜ் என்று அழைக்கப்பட்ட இந்த அரிய ஆமை, அதன் இனத்தின் கடைசி ஆமையாகக் கருதப்படுகிறது. இதன் வயது 100 இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கணிக்கின்றனர்.

---

கால்பந்து விளையாட்டில் பந்து கோல் கோட்டை கடந்ததா இல்லையா என்பதைக் கண்டறிய புதிய தொழிநுட்பத்தை அடுத்த உலகக் கோப்பை போட்டிகளின் போது அறிமுகப்படுத்த, சர்வதேச கால்பந்து சம்மேளனமான ஃபிஃபா முடிவெடுத்துள்ளது. இந்தத் தொழிநுட்பமானது போட்டிகளில் விளையாடப்படும் பந்துக்குள் ஒரு சிறிய மின்னணு தகடு (மைக்ரோ சிப்) பொருத்தப்பட்டிருக்கும். அதே போல் கோல் கம்பத்திலும் இது போல பொருத்தப்பட்டு இரண்டும் ஒருங்கிணைக்கப்படும். இதன் மூலம் பந்து கோல் கோட்டை கடக்கும்போது, நடுவர்களுக்கு மின்னணு சமிக்ஞை கிடைக்கும்.

---

இந்திய ராணுவத்தினர் 13.07.2012 அன்று **“அக்னி–1”** என்ற ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தினர். அது 700 கிலோ மீட்டர் தூர இலக்கினை தாக்கி அழித்தது.

---

காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டம் கௌ்னி பகுதியில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி இந்தியாவுக்குள் நுழைந்த பாகிஸ்தான் ராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்த 2 சிம் கார்டுகள் மற்றும் பாகிஸ்தான் பணம் ரூ. 13,306/– ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

நன்றி : www.dailythanthi.com


## எங்களுடன் தொடர்பு கொள்ள

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

கிராம ஆலயம்

# காளாகேத்

## மத்தயப்பிரதேசம்



காளாகேத் கிராமம் மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் ஜாபுவா மாவட்டத்தில் மிகவும் உள்ளடங்கிய பகுதியாகும். இங்கு வாழும் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஒரு முறைகூட கேள்விப்படாதவர்கள். இவர்கள் மிகவும் முரட்டாட்டமுள்ளவர்கள்.

இந்தப் பகுதியில் ஊழியம் செய்யும்படியாக சென்ற ஒரு சகோதரர் மாலையில் திரும்பும்போது கிராமத்தில் முக்கியமானவர்கள் ஊழியர் குடும்பத்தைப் பிடித்து, அடித்து ஓர் அறையில் அடைத்து வைத்தார்கள். மேலும் எங்களுக்கு எந்த சுவிசேஷமும் வேண்டாம் என்று அதிகமாக கிண்டல் செய்து, துன்புறுத்தினார்கள். அந்த நேரத்தில் தேவன் அங்கு இரண்டு போலீஸ்காரர்களை அனுப்பினபடியால் அந்த ஊழியர் குடும்பம் அவர்கள் கையில் இருந்து மீட்கப்பட்டது.

இப்படியாக சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு நிறைந்த இந்த கிராமத்தில் வசித்து வந்த ஜோதிபாய் புரியா என்ற சகோதரரரின் 9வயது மகன் பாபுபாய் நடக்க முடியாமல் கால் நொண்டியாக இருந்தான். இவனுக்காக சுதேச ஊழியர் எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தினைக் கொடுத்தார். அந்த சகோதரன் எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டான். இந்த அற்புதத்தினை நேரில் கண்ட ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்தார்கள். அதன்பின் சகோ. ஜோதிபாய் அவர்கள் இல்லத்திலேயே ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசிகள் அதிகரிக்கவே, தேவ நாமம் மகிமைப் படும்படியாக ஒரு அழகிய கிராம ஆலயம் அந்த கிராமத்தில் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற்று வந்தது.

தற்போது 60க்கும் அதிகமான விசுவாச குடும்பங்கள் சபையில் இணைந்தபடியால் அந்த ஆலயத்தில் இடப் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆகவே அருகினில் தேவ நாமம் மகிமைக்கென்று ஒரு புதிய அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, 16.06.2012 அன்று தூத்துக்குடி, சகோ. டேனியல் கிருபாகரன் அவர்கள் மூலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த கிராம ஆலயத்தில் போதகராக சகோ. சர்தார்பாய் டாமோர் இருந்து ஊழியம் செய்து வருகிறார்.

இந்த கிராம ஆலயம் **இயேசு விடுவிக்கிறார்,** நாலுமாவடி ஊழியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூ. 2.5 இலட்சங்கள் மூலமாகக் கட்டபட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# பீல் ஆதிவாசி மாணவர்

## பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **காலேப் டாமோர்** |
| தந்தையின் பெயர் | : | ரசியா டாமோர் |
| தாயார் பெயர் | : | லீலா பேன் |
| பிறந்த நாள் | : | 09.11.2001 |
| படிக்கும் வகுப்பு | : | 3ம் வகுப்பு |
| சொந்த ஊர் | : | தோரணியா |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

### மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

இவனுடைய தந்தை சகோ. ரசியா டாமோர் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவரது கிராமம் மிகவும் உள்ளடங்கிய கிராமமாகும். வெளி உலகத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் அறியாமல், பாவ வாழ்க்கை வாழ்ந்தவர். அசுத்த ஆவிகளை வணங்கியதால் இவருடைய குடும்பம் அசுத்த ஆவியின் பிடியினாலும், சமாதானமின்றியும், பலவித பிரச்சனைகளுடனும் காணப்பட்டது. இதற்காக மந்திரப் பூஜைகளை மேற்கொண்டும் எந்தவித பலனுமில்லை. இந்த சூழ்நிலையில் நமது ஷாலோம் ஊழியரைக் குறித்துக் கேள்விப்பட்டு ஊழியரிடம் வந்து ஜெபித்தபோது தேவன் சமாதானத்தையும், அசுத்த ஆவியின் பிடியில் இருந்து விடுதலையும் கொடுத்தார். அதன்பின் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, ஊழியத்திற்காக அர்ப்பணித்து தனது சொந்த கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** காலேப் டாமோர் நன்றாக படிப்பான். விளையாட்டில் நல்ல ஆர்வமுடையவன்.

**ஜெபியுங்கள்:–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** *Mr. Shadrach Thomas - Secunderabad*

நீங்களும் மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 259 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.